உ

கணபதிதுணை.

# தண்டலையார்சதகம்

என்னும்

# பழமொழிவிளக்கம்.

தண்டலைச்சேரி

## சாந்தலிங்கக் கவிராயரவர்கள்

இயற்றியது.

இஃது,

திருத்தணிகை

## ஆறுமுகசுவாமிகளால்

பரிசோதித்து.

பிரிங்கிமாநகரம்

சாமிமுதலியார்-குமாரர்

வேம்புலிமுதலியாரது

வேதாந்தசமரசவிளக்க அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

விஷு ௵ ஆவணி ௴.

சென்னை சூளை அவதானம்பாப்பையர்வீதி ௮௮-வது நெ.

1881

கடவுள்துணை.

தண்டலையார்சதகமென்னும்

# பழமொழிவிளக்கம்.

தேசிகன்

காப்பு.

சீர்கொண்டகற்பகத்தின் வாதாவிநாயகனைத் தில்லைவாழும்,கார் கொண்டகரிமுகனை விகடசக்கரக்கணபதியைக் கருத்துள்வைப்பாம், பேர்கொண்டஞானநாயகிபாக னீணெறியெம்பெருமான்மீதில், ஏர் கொண்ட நவகண்டமிசைந்தபழமொழிவிளக்கமியம்பத்தானே. (௧)

வேதநெறிவிளம்பியசொல்லாகமநூல் விளம்பியசொல்மிகுபுராணம், ஏதுவினிற்காட்டியசொல் லிலக்கணச்சொல் லிசைந்தபொருளெல்லாநாடி, ஆதிமுதலுலகுதனில் விளங்குபழமொழிவிளக்கமறிந்துபாடச், சோதிபெறுமதவேழமுகத்தொருவ னகத்தெனக்குத்துணைசெய்வானே. (௨)

## அவையடக்கம்.

வள்ளுவர்நூலாதிபல நூலிலுளவரும்பொருளை வண்மையாக, உள்ளபடிதெரிந்துணர்ந்த பெரியவர்கண்முன்னு மொருவன்போல, பள்ளமுதுநீருலகிற் பரவுபழமொழிவிளக்கம் பரிந்துகூறல், வெள்ளமதி யினன்கொல்லத்தெருவதனிலூசிவிற்கும்வினையதாமே.(௩)

## நூல்.

வரமளிக்குந்தண்டலையார் திருக்கோயிலுட்புகுந்துவலமாய்வந்து, ஒருவிளக்காகிலும் பசுவினெய்யுடன்றுமனைநூலிலொளிரவைத்தால், கருவிளக்கும்பிறப்புமில்லையிறப்புமில்லைகயிலாசங்காணியாகும்,திருவிளக்கிட்டார்தம்மைத்தெய்வமறிந்திடும்வினையுந்தீருந்தானே

கூன்செய்தபிறையணியுந் தண்டலையார்வளநாட்டிற் கோடிகோடி, இயான்செய்தவினையகற்றி நன்மைசெய்தார்க்குபகாரமென்னாலுண்டோ, ஊன்செய்தவுயிர்வளரத் தவந்தானநடந்தெறவுதவியாக,வான்செய்தநன்றிக்குவையகமென்செய்யுமதைமதித்திடீரோ. (௨.)

அட்டதிசையெங்கணும்போயலைந்தாலும்பாதாளமதிற்சென்றாலும், பட்டமெனவானூடு பறந்தாலுமென்னவதிற்பயனுண்டாமோ, பிட்டுவரமண்சுமந்ததண்டலைநீணெறியாரே பெரியோர்கையில், இட்டபடியேயொருவர்பேராசைப்படில்வருவதில்லைதானே. (௩)

தன்மமதேசெயவேண்டுந்தண்டலைநீனெறியாரேதயவுசெய்வாவன்மவினைசெயவேண்டாம் பொய்வேண்டாம் பிறரையொன்றும் வருத்தவேண்டாம், தன்மநெறியறவேண்டாம் வேண்டுவதுபிறர்க்குபகாரங்கள்செய்தல், நன்மைசெய்வர்நலம்பெறுவார் துன்மைசெய்வார் தீமையுற்று நலிவர்தாமே. (௪)

சங்கையறப்படித்தாலுங்கேட்டாலும் பிறர்க்குநீதிதனைச்சொன்னாலும், அங்கணுலகினிற்சிறியோர் தாமடங்கிநடந்துகதியடையமாட்டார், திங்களணிசடையாரோ தண்டலையாரேசொன்னேன்சிறிதுகாலம், கங்கையிலேபடிந்தாலும்பேயச்சுரைக்காய்நல்லசுரைக்காயாகாதே.

வாங்காலமுண்டசெழுந்தண்டலையா ரடிபணிந்துமகிழ்ந்தொர்நாளும், போங்காலம்வருமுன்னேபுண்ணியஞ்செய்தரியகதிபொருந்தாமல், ஆங்காலமானதெல்லாமவிசாரி யாடியறிவழிந்திவீணே, சாங்காலஞ்சங்கராசங்கரா வெனில்வருமோதருமந்தானே. (௬)

வடியிட்டபுல்லர்தமையடுத்தாலும் வருவதுண்டோமலிநீர்க்கங்கை, முடியிட்டதண்டலைநாதனைப்புகழிற்பெருவாழ்வுமுத்தியுண்டாம், மிடியிட்டவினைதீருந்தெய்வமிட்டும்விடியாதவீடுவீணர், படியிட்டுவிடுவதுண்டோ வவனருளேதஞ்சமெனப்பற்றுவீரே. (௭)

அள்ளித்தண்ணீறணியுந்தண்டலையார்வளநாட்டிலாண்மையுள்ளோர், விள்ளுற்றகல்வியுள்ளோர் செல்வமுள்ளோ ரழகுடையோர் மேன்மைநோக்கி, யுள்ளத்திலழன்றுழன்று நமக்கில்லையெனவுனைப்போர்க்குவமைகூறில், பிள்ளைபெற்றவளைப்பார்த்து மலடிபெருமூச்செறியும்பெற்றியாமே. (௮)

செங்காவிமலர்த்தடஞ்சூழ் தண்டலையாரருங்கருணை சிறிதுண்டானால், எங்காகிலென்னவவரெண்ணியவெல்லாமுடியுமில்லையாகில் பொங்காழிசூழுலகிலுள்ளங்கால் வெள்ளெலும்பாய்ப்பொலியவோடி ஐங்காதம்போனாலுந்தன்பாவந்தன்னுடனே யாகுந்தானே. (௯)

வர்க்கத்தார்தமைவெறுத்துவிர்த்தியராமெய்ஞ்ஞானவடிவத்தாயோர், கற்கட்டாகியமடமுங்காணியுஞ்செம்பொன்றேடுங்கருமமெல்லாம், பொற்கொத்தா நெல்வயல்சூழ்தண்டலை[illegible]ணெறியாரே பொன்னாடாகும், கொர்க்கத்தேபோகையிலுங் கடகத்தேராட்டினத்தைச் சுமந்தவாறே. (௰)

காதிலேகுண்டலங்கள் கையிலேசெபமாலை கழுத்தின்மார்பின் மீதிலேதாழ்வடங்கள் மனதிலேகரவடமாவேடம்பூண்டோன், வாதிலேயயன்றேடுந்தண்டலைநீ ணெறியாரேமனிதர்காணும், போதிலேமௌனியிராப்போதிலேருத்ராட்சப்பூனைதானே. (௰௧)

சிறியவராமுழுமூடர் துரைத்தனமாயுலகாளத்திறம்பெற்றாலு
அறிவுடையார்தங்களைப்போ லன்புடையார் புகழுடையாராகாமாட்
டார்,மறிதருமான்மழுவேந்துந்தண்டலைநீணெறியாரேவாரிவாரிக் கு
ற்றுணிமைதானிட்டாலுங்குருடிகண்ணாற்கண்ணாகிக்குணங்கெடாதே.

பொற்குடையும்பொற்றுகிலும் பொற்பணியுங்கொடுப்பதென்
னபொருளோவென்று, நற்கமலமுகமலர்ந்தேயுபகார மிக்கவின்சொ
னடத்தனரும், கற்கனாயுமொருபாகர்தண்டலையார்வளநாட்டிற்கரு
ம்பினையந்த, சர்க்கரையின்பந்தலிலே தேன்மாரிபெய்ந்துவிடுந்தன்
மைதானே. (௰௩)

திருவிருக்குந்தண்டலையார்வளநாட்டில்வாழ்க்கைமிகச்செலுத்து
நல்லோர்க், கொருவிருந்தாகிலுமின்றியுண்டபகல்பகலாமோ வுறவா
ய்வந்த, பெருவிருந்துக்குபகாரஞ்செய்தனுப்பி யின்னமெங்கேபெரி
யோரென்று, வருவிருந்தோடுண்பதல்லால்விருந்தில்லாதுணுஞ்சோ
றுமருந்துதானே. (௰௪)

ஓதரியதண்டலையாரடிபணிந்து நல்லவனென் றுலகமெல்லாம்,
போதமிகப்பெயருடனேபுகழ்படைத்துவாழ்பவனே புருடனல்லால்
ஈதலுடனிரக்கமின்றிப்பொன்காத்தபூதமென்னவிருந்தாலென்ன,கா
தவழிபேரில்லான்கழுதையோடொப்பனெனக்கழறலாமே. (௰௫)

புனங்காட்டுமெண்ணும்விண்ணு மஞ்சவருங்காலனையும்போடா
வென்று, இனங்காட்டுமோர்க்கண்டன்கடிந்தபதிறுறுவயதென்றும்பெ
ற்றான்,அனங்காட்டுந்தண்டலையா ரடியரொல்லாமொருவருக்கு மஞ்சு
வாரோபனங்காட்டுநரிதானுஞ்சலசலப்புகொருநாளும்பயப்படாதே.

குறும்பெண்ணுதுயர்ந்தநல்லோராயிரந்தான்சொன்னாலுங்குறி
கொள்ளாமல், வெறும்பெண்ணுச் செயிலுழல்வார் மெய்ஞ்ஞானம்
பொருந்தியுனைவேண்டாரந்தோ, உறும்பெண்ணார்மொழியிலஞ்சேர்
தண்டலைநீணெறியாரோயுண்மைதேறில், எறும்பெண்ணுயிரம்பால்க
ழுதையுங்கைகடந்தெனுமெண்ணாந்தானே. (௰௭)

அல்லமருங்குழலாளைவரகுணபாண்டியராஜ னன்பாலீந்தான்,
கல்லைதனில்மென்றுமிழ்ந்தவூனமுதைக்கண்ணப்பன்கனிவிலீய்ந்தா
ன்,சொல்லியதண்டலையார்க்குக்கீரையுமாவடுவுமொருதொண்டனீய்
ந்தான்,நல்லதுகண்டானமதுநாயகனுக்கென்பர்கெதிரெண்ணுவாரோ.()

அந்தணாநல்லவனாபரமசிவனடியவனாயகந்தையாலே, நிந்த
னைசொன்னாலுமென்னவைதாலுமென்னவதினிஷிதமுண்டோ, சுந்த
ரர்க்குத்தூதுசென்றதண்டலைநீணெறியாரோதுலங்கும்பூர்ணச், சந்தி
ரனைப்பார்த்துநின்றுநாய்குலைந்தபோதிலென்னதாழ்ச்சிதானே. ()

சின்னமெங்கேகொம்பெங்கேசிவிகையெங்கே பரியெங்கேசிவியாரெங்கே, பின்னையொருபலனுமில்லைவாழ்வு குலைந்தாலுடனேபேபேயென்றே, சொன்னவிலுந்தண்டலையார்வளநாட்டிற்சாம்பிராணிதூபங்காட்டுஞ், சன்னதுமாளதுகலைந்தாற்கும்பிடெங்கேவப்பரித்தனையென்றாரோ. (௨௰)

தண்ணமருமலர்ச்சோலைத்தண்டலைநீணெறியார்மேற் றமிழைப்பாடில்,எண்ணில்மிகயிம்மையினுமறுமையினும் வேண்டியதுண்டிலைதயோராமல், மண்ணவின்மினசநரஸ்துதிகள் பண்ணியலைந்தேதிரிவார்வருதகமின்றி, வெண்ணெய்தமதிடத்திருக்கநெய்தேடிக்கொண்டலையும்வீணர்தாமே. (௨௧)

மேட்டுக்கேவிளைத்தவிளைவீணருக்கேசெய்தநன்றி மேயும்பட்டிமாட்டுக்கேகொடுத்தவிலைபரத்தையர்க்கே தேடியிட்டவண்மையெல்லாம், பாட்டுக்கேயருள்புரியுந்தண்டலையார்வளநாட்டிற்பரிந்திடாதகாட்டுக்கேயெறிந்தநிலாகானலுக்கேபெய்ந்தமழைகடுக்குந்தானே. ()

பேரானகவிராஜருடன்சிறியகவிஞருமேப்ரபந்தஞ்செய்வார்,வீராதிவீரருடன்கோழைகளும் வாள்பிடித்துவிருதுசொல்வார், பாராளுந் தண்டலைநீணெறியாரோயிருவரையும்பகுந்துபார்த்தே, காராயிற்றேவரடியாருடனேபேய்களுநின்றாடும்வாறே. (௨௩)

வம்பொல்லாமதிக்கமிகுந்திருந்தாலென்னவதுமாறியோய்ந்த,பம்பரமாய்மூலையினிற்கிடந்திட்டாலென்னவதிற்பலனுண்டாமோ, சம்புலவுந்தண்டலையார்வளநாட்டில்வருந்துபலகழுதைதாமும், அம்புவியிற்கிடந்தென்னபாதாளந்தனிற்கிடந்தென்னருகுந்தானே. (௨௪)

புல்லறிவுக்கெட்டாததண்டலையார்பொன்னிவளம் பொருந்துநாட்டில்சொல்லருமாதவம்புரிந்தசவுபரியர்துறவறத்தைத்துறந்துமீண்டான், நல்லறமாம்வள்ளுவர்போல்குடிவாழ்க்கைப் பத்தியுடனடத்தினின்றால்,இல்லறமேபெரிதாகுந்துறவறமேசிறிதென்னவியம்பலாமே.

பொலியவளம்பலதழைத்ததண்டலையார்திருப்பாதம்போற்றிநாளும்,வலியவறஞ்செய்தறியீர்மறஞ்செய்வீர்நம[illegible]தர்வந்துகூடிமெலியவரிந்திடும்போதுகலக்கண்ணீருகுத்தாலும்விடுவதுண்டோ, எலியழுதுபுலம்பிடினும்பூனைபிடித்ததுவிடுமோவியம்புவீரோ. (௨௬)

கறுத்தவிடமுண்டருளுந் தண்டலையார்வளநாட்டிற்கடியதீயோர்,குறித்தமனையாட்டனையுந்துகிலுரிந்துமைவரன்றுகோபித்தாரோ, பதித்தரியபொருண்முழுதுங்கவர்ந்தாலும் மடிந்தாலும்பழிசெய்தாலும்பொறுத்தவரேயரசாள்வர்பொங்கினவர்காடுறைந்துபோவர்தாமே.

தண்டலையாரடிபணிந்து தவந்தானமுபகாரந் தருமஞ்செய்து, கொண்டபொருள் விலைவாசிகாணிதேடிக் கோடிகோடிகொடுப்பதல்லால்,வண்டருமாயொன்றுபத்துவிலைகூறியநியாயவட்டிவாங்கிக்,கண்டவர்தங்கடுந்தேட்டுக்கணையறக்கெடுக்குமிதுகருமந்தானே. ()

கட்டுமாங்கனிவாழைக்கனிபலவின்கனிகளுங்காரமாகும்,சிட்டருமவ்வணந்தேடும்பொருளையெலாமிரப்பவர்க்குச்செலுத்திவாழ்வர் மட்டுலவுஞ்சடையாரேதண்டலைநீணெறியாரேவருடந்தோறும், எட்டிமரம்பழுத்தாலுமீயாதார்வாழ்ந்தாலுமென்னதானே. (௨௯)

இதுகருமமிதனாலேயிதைமுடிப்பாயெனத்தொழிலையெண்ணிச்செய்தால், அதுகருமம்பாராமற்றிருடியு மள்ளியும்புரட்டாயலைவதெல்லாம், மதியணியுந்தண்டலையார்வளநாட்டினிராடுமாதர்தங்கள், முதுகினைத்தேயெனச்சொன்னான் முலைமீதுகையைவிட்டமுறைமைதானே. ஜேசவலு நாயுடு (௩௰)

கொச்சையில்பாலதிகமுண்டோகூத்திமாரிடத்தினல்ல குணந்தானுண்டோ, துர்ச்சனருக்கறிவுமுண்டோதுச்சரெங்கேபோனாலுந்துரையாவாரோ,நச்சரவத்தொடையாரேதண்டலையாரேயிந்த நாடெல்லாமல்,அச்சியிலேபோனாலு மகப்பெயனாக்காசதன்மேலார்கொள்வாரோ. (௩௧)

மையிலேதோய்ந்தவிழி வஞ்சியரைச் சேர்ந்தவர்கள் வறுமையுண்டாய், மெய்யிலேபிணியுமுண்டாய்க்கைப்பொருளுங்கேடாகிவிழலராவர், செய்யிலேயனந்தழைக்குந்தண்டலையார்வளநாட்டிற்றெளிந்தநல்லோர், கையிலேபுண்ணிருக்கக்கண்ணாடிபார்ப்பதென்னகருமந்தானே. (௩௨)

நித்தமெழுநூறுநன்றிசெய்தாலுமொருதீதுநேரேசெய்தால்-அத்தனையுந்தீதென்றேயழித்திடுவர்கயவரதையகற்றலாமோ,வித்தகஞ்சேர்மறைமுழங்குந்தண்டலையார்வளநாட்டில்வெண்ணீறிட்டு, எத்தனைசெய்தாலுமென்னபித்தளைக்குத்தன்னாற்றமியற்கைதானே. ()

உள்ளவரைக்கெடுத்தோருமுதவியற்றுவாழ்ந்தோருமுரைபொய்த்தோருந், தள்ளிவழக்குரைத்தோருஞ் சற்குருவைப்பழித்தோருஞ்சாய்ந்துபோவார், பள்ளவயற்றண்டலையார்பதம்பரவிப் பணிந்தவரும்பாடினோரும், பிள்ளைகளைப்பெற்றோரும்பிட்சையிட்டநல்லோரும்பெருகுவாரே. (௩௪)

சொன்னத்தைச்சொல்லுமிளங்கிள்ளையைப்போற்றண்டலையார்தொண்டுபண்ணி,இன்னத்துக்கின்னதென்றுபகுத்தறிவொன்றில்லாதவீணரெல்லாந், தன்னைத்துக்கண்டவுடன்முறைபேசிக்காணாமற்சாடைபேசி, முன்னுக்கொன்றாய்நடந்துபின்னுக்கொன்றாய் நடந்துமுடிவர்தாமே. (௩௫)

பார்க்குளறிவிருந்தாலும் படித்தாலுங்கேட்டாலும்பணிந்துவேத, மார்க்கமுடனடந்தாலுஞ்சிறியவர்க்குப்பெரியவர்தம் மகிமையுண்டோ, ஆர்க்குமருங்கதியுதவுந்தண்டலையாரோசொன்னேனுகாயத்தில் ஊர்க்குருவிதானுயரப்பறந்தாலும்பருந்தாகாதுண்மைதானே. ()

பாரறியநாமறியப்புலவரென்பார்கல்வியினிற்பயிற்சியில்லார், சீரறியார்தனையறியார்சிவிகையேறுவர்புலமைசெலுத்திக்கொள்வாராரணியுந்தண்டலைநீணெறியாரோயிலக்கணநூலறியாரேனும், காரிகையாகிலுங்கற்றுக்கவிசொல்லார்பேரிகொட்டக்கடவர்தாமே. (௩௭)

கொடியருக்குநல்லபுத்திசொன்னாலும்வாராது கொடையிலாதமடையருக்குமதுரகவியுரைத்தாலு மவர்கொடுக்கமாட்டார்கண்டீர், படியளக்குந்தண்டலைநீணெறியாரோநன்றாகப்பலருங்காண,விடியுமட்டுமழைபெயினுமதிலோட்டாங்கிச்சின்முளைவீசிடாதே. (௩௮)

கோடாமற்பெரியவர்போனடப்பதெல்லாங் குற்றமில்லைகுறைசெய்தாரோ, ஆடாகிக்கிடந்தவிடந்தனின்மயிருங்கிடவாமலழிந்துபோவார், வீடாநற்கதியுதவுந்தண்டலையாரோசொன்னேன் மெய்யோபொய்யோ, கோடாலிக்காம்புநெடுங் குலத்தினுக்கேகேடான கொள்கைபோன்றே. (௩௯)

சிறுபிறைதோன்றியசடையார்க்குதண்டலையார் பொன்னிவளஞ்செழித்தநாட்டில், குறையகலும்பெருவாழ்வு மைந்தருமக்களும்பொருளாகக்குறித்திடாமல், மறைபயிலும்பத்ரகிரிபட்டணத்துப்பிள்ளையுஞ்சேர்மகிமையாலே, துறவறமேபெரிதாகுந்துறவிக்குவேந்தனுருதுரும்புதானே. (௪௰)

பேரிசைக்குஞ்சுற்றமுடன்மைந்தருமற்றுமுளபேருஞ்சூழ், பாரிடத்திலிருந்தாலுந்திருநீற்றுக்கழற்கொடிபோற்பற்றில்லாமல், சீரிசைக்குந்தண்டலையாரஞ்செழுத்தை நினைத்துமுத்திசேரவேண்டும், ஆரியக்கூத்தாடுகினுங்காரியமேகண்ணாவதறிவுதானே. (௪௧)

இரந்தனையித்தனைநாளும் பிறந்தனைநானென்றலைந்தா யினிமேலேனும்,கரந்தமதிசடைய ணியுந்தண்டலைநீணெறியாரோகாப்பாரென்னும்,உரந்தனை வைத்திருந்தபடியிருந்திடினுன்றனக்கெல்லாமுண்டாமுண்மை, மரந்தனைவைத்தவர்நாளும்வாடாமற்றண்ணீரும்வார்ப்பர்தாமே. (௪௨)

நேற்றுள்ளாநின்றிருக்கை நிச்சயமோவாதலினா னினைத்தபோதே, ஊற்றுள்ளபொருளுதவியறந்தேடி வைப்பதறிவுடமையன்றோ, கூற்றுள்ளமலையவருந்தண்டலையாரோசொன்னேன்குடபால்வீசும்,காற்றுள்ளபோதெவருந்தூற்றிக்கொள்வதுநல்லகருமந்தானே. (௪௩)

ஓதரியவித்தைவந்தா லரியசபைக்கழகாகு முலகிலார்க்கும், ஈதலுடனறிவுவந்தா லினியகுணங்களுக்கழகா யிருக்குமன்றே, நீதிபெறுந்தண்டலையார் திருநீறுமெய்க்கழகாநிறைந்துதோன்றும்,காதினுக்கேகடுக்கனிட்டால் முகத்தினுக்கேயழகாகக்காணுந்தானே. ()

அருண்மிகுந்தவாகமநூல் படித்தறியார்கேள்வியொன்று மறியார்பின்னும், இருவினையின்பயனறியார் குருக்களென்றேயுபதேசமெவர்க்குஞ்செய்வார், வரமிகுந்ததண்டலைநீணெறியாரேயவகிரியைமார்க்கமெல்லாம், குருடனுக்குக்குருடன்கோல் கொடுத்துவழிகாட்டிவருங்கொள்கைதானே. (சரு)

சீருலவுந்தண்டலையார் திருவருளாலகவிலைகள் செழித்தநாட்டில், பாரியெனவாயிரம்பொன் கனதானங்கொடுத்துவரும் பலனைப்பார்க்கில், நேரிடும்பஞ்சந்தனிலேயெவ்வளவாகிலுங் கொடுத்தநீதியாகும், மாரிபதின்கலனீரிற்கோடைதனிலொருகுடநீர்வண்மைதானே.()

பிறக்கும்போதொரு பொருளுங்கொண்டுவந்ததில்லையுயிர் பிரிந்துவேறாய், இறக்கும்போதினுங்கொண்டு போவதில்லையென்றுசும்மாயிருந்துவீடே, சிறக்குந்தாயினுமருள்வார்வண்டயிற்சேருமிந்தத்தேசமெல்லாம், பறக்குங்காய்காயிருக்குங் கொம்பறியாதென்னுமொழிப்பயன்பாரீரோ. (சஎ)

வைதிடினும்வாழ்ந்திடினு மின்பதுன்பம்வந்திடினும் வம்புகோடி, செய்திடினுந்தண்டலையார்செயலென்றேதெளிவதல்லாற் செயல்வேறுண்டோ, மெய்தவிரவவர்செய்தாரிவர்செய்தாரெனவீணில்வெறுக்கலாமோ, வெய்தவர்தம்மருகிருக்கவம்பைநொந்தாற்கருமமென்னவியம்புவீரோ. (சஅ)

சுற்றமாநெருங்கியுள்ளோர் தனையறிந்தோகற்றுணர்ந்தோர்துணைவேறில்லோர், உற்றவேதியர்பெரியோர்க் குதவியின்றிபிறர்க்கருளுமுதவியெல்லாம், சுற்றுநான்மறைபரவுந் தண்டலையாரேசொன்னேன்சுமந்துநொந்து, பெற்றதாய்ப்பசித்திருக்கப் பிராமணபோசனநடத்தும்பெருமைதானே. (சகூ)

வல்லமையான்முடிவதுண்டோ தலைகீழாய்நின்றாலும் வருவதுண்டோ, அல்லதுதானவன்செயலேயல்லாமற்றன்செயலாலாவதுண்டோ, புல்லறி[illegible]மயங்காமற்றண்டலையாரடிபணிந்துபுத்தியுண்டாய், இல[illegible]துவாராதுநமக்குள்ளதுபோகாதெனவேயிருக்கலாமே. ()

நாற்கவியும்புகழ்ந்தேத்துந் தண்டலையார்வளநாட்டி னல்லநீதிமார்க்கமுடனடந்துசெங்கோல்வழுவாமற்புவியாண்டு வண்மைசெயயும், தீர்க்கமுள்ளமன்னவனைத் தெய்வமென்பார் கொடுங்கோன்மைசெலுத்திநிற்கும், மூர்க்கமுள்ளமன்னனுந்தன் மந்திரியுமாநரகில்மூழ்குவாரோ. (ருக)

நன்றிதரும்பிள்ளையொன்று பெற்ருலுங்குலமுழுது நன்மையுண்டாம், அன்றியறிவில்லாத பிள்ளையொருநூறுபெற்று மாவதுண்டோ, மன்றிடம்புரிவாரோ தண்டலையாரேசொன்னேன் வருடந்தோறும், பன்றிபலவீன்றுமென்னகுஞ்சரமொன்றீன்றதனுல் பலனுண்டாமே. (௫௨)

உழையிட்டவிழிமடவா ருறவுவிட்டுமிகவாழு முலகவாழ்க்கைப், பிழையிட்டேயின்னமென்றனுசைவிடாதலக்கழியப் பெற்றேனந்தோ, தழையிட்டகொன்றைபுனைதண்டலையாரேயெனது தன்மையெல்லாம், மழைவிட்டுந்தூவானம்விட்டதில்லையாயிருந்த வண்மைதானே. (௫௩)

துன்மார்க்கற்காயிரந்தான்சொன்னுலுமறந்துவிட்டுத் துடுக்கேசெய்வார், சன்மார்க்கர்க்கொருவார்த்தைசொலிற்கமுகிற்பட்டசெழுந்தழும்பாக்கொள்வார், பன்மார்க்கமறைபணியுந்தண்டலையாரேசொன்னேன்பழமையான, நன்மாட்டுக்கொருசூடு நற்பெண்டிர்க்கொருவார்த்தைநடக்கையாமே. (௫௪)

கரப்பவர்க்குநல்லகதி வருவதில்லை செங்கோலாற்கடல்சூழ்வையம், புரப்பவர்க்குமுடிவிலே சொர்க்கமல்லா னரகமில்லைபொய்யில்லாமல், உரைப்பவர்க்குநலம்புரியுந்தண்டலையாரேசொன்னே னொருமையாக, இரப்பவர்க்குவெண்சோறு பஞ்சமுண்டோ வொருக்காலுமில்லைதானே. (௫௫)

படுங்கோலமடையாமற் றண்டலையார்திருப்பணிக்குப் பங்கஞ்செய்வார், நெடுங்கோளுந்தண்டமுமா வீனுனவிணைங்போ னீதிசெய்வார், கெடுங்காலமல்லாமல் விளைவுண்டோமழையுண்டோ கேள்வியுண்டோ, கொடுங்கோன்மன்னவர்நாட்டிற்கடும்புலிவாழுங்காடு குணமென்பாரோ. (௫௬)

விற்பனர்க்குவாழ்வுவந்தான் மிகவணங்கிக்கண்ணேட்ட மேனுஞ்செய்வார், சொற்பருக்குவாழ்வுவந்தால் கண்டெரியாதிறுமாந்துதுன்பஞ்செய்வார், பற்பலர்க்குவாழ்வுதருந்தண்டலை நீணெறியாரோபண்பில்லாத, அற்பருக்குவாழ்வுவந்தா லர்த்தராத்திரிகுடை மேலாகுந்தானே. (௫௭)

விசயமிகுந்தண்டலைநீ ணெறியாரோயொருத்தர்சொல்லை மெய்யென்றெண்ணி, வசைபெருகவநியாயஞ்செய்துபிறர் பொருளையெல்லாம்வலிதின்வாங்கி, திசையறியுக்கீர்த்திபெறத் தர்மமென்றுஞ்செய்வதெல்லாம், பசுவினையேவதைசெய்து செருப்பினைத்தானங்கொடுக்கும்பான்மைதானே. (௫௮)

கற்றவர்க்குக்கோபமில்லை கடந்தவர்க்குச்சாதியில்லைகருணைகூர்ந்த, நற்றவர்க்குவிருப்பமில்லை நல்லவருக்கொருகாலு நரகமில்லை,

பணந்தானேகுணமாகும்பசிதானேகறியாகும்பார்த்திடீரே. (௯௩)

உருவெடுத்தநாண்முதலா லொருசாண்வயிற்வளர்க்கவுழல்வத
ல்லால், மருவிருக்குநின்பாதமலர் தேடிதினம்பணிய மாட்டேனங்
தோர்திருவிருக்குமணிமாடத் தண்டலையாரேயெனது செய்கையெல்
ம், சருகரிக்கநேரமன்றித்தீக்காயநேரமில்லாத்தன்மைதானே. (௯௪)

மானென்றவடிவெடுத்துமாரீசன்பேய்மடிந்தான் மானைவேண்
டித், தேனென்றமொழிசசீதைசிறையிருந்தான் சீதைதனைத்திருடிச்
சென்றே,வானென்றுமரசிழந்தானிராவணனுந்தண்டலையார்மகிமை
யன்றோ, தானென்றுநினைக்கிலதைத்தெய்வமொன்றுநினைப்பதுவுஞ்
சகசந்தானே- (௯௫)

ஆன்பிள்ளாயெனக்கொடுக்கும் பெரியவனையடித்தவனிவ்வவனி
யோரில், நான்பிள்ளாயதிகனென்றே நண்ணலருமேவல்செய்நாளும்
வாழ்தல், வான்பிள்ளைப்பிறைசூடுந்தண்டலையார்பூஷணமாம் மருவு
நாகம், ஏன்பிள்ளாய்கருடாநீசுகமோவென் றுரைத்தவிதமென்ன
ாமே. (௯௬)

மற்றவரார்தமிழ்க்குற்றநாட்டவல்லார்நக்கீரன்வலியனாகி, வெற்
றிபுனைமீனாட்சிசுந்தரநாயகரடுத்துவிளம்பும்போது,பற்றுளதண்டலை
வாழுங்கடவுளென்றும்பாராமல்பயப்படாமல்,நெற்றிவிழிகாட்டுகினு
ங்குற்றங்குற்றமேயென்றேநிறுத்தினனே. (௯௭)

முக்கணர்தண்டலைநாட்டிற்கற்புடையோர் பெருமைமொழிந்தி
டிலொருத்தி, ஒக்குமெரிகுளிரவைத்தாளொருத்திவில்வேடனையெரி
த்தாளொருத்தி, மூவர்பக்கமுரவமுதளித்தாளொருத்தி பெழுபொ
றிநடத்தும், பான்மைபோல் கொக்கெனவேயிருந்தனையோ கொங்க
ணவாவென்றொருத்திகூறினளே. (௯௮)

பரங்கருணைவடிவாகுந்தண்டலையார்வளநாட்டிற்பருவஞ்சேர்ந்த
ங்கி, தரங்குலவுகாமநூல்தனையறிந்தவதிரூபத்தையலாளை, வரம்பரு
தாழடிமையுள்ள[illegible]டிகளுக்கேகொடுத்தல்வாய்ப்பிலாத, குரங்குதன்
கையினிற்பூமாலை[illegible]னையேகொடுத்தகொள்கைதானே. (௯௯)

சோறென்[illegible]செய்யுமென்றுகுறித்திடிலோநல்லவருள்சுரந்துகா
க்கு[illegible]றென்னசெய்யுமெல்லாமழிந்திடவேசெய்யுமதன்சொரூப
முண்டாம், சோறென்னவெளிதனவோதண்டலையார் மகபூசைதுலங்
கசெய்யும், சோறென்னசெய்யுமென்றால்சொன்னவண்ணஞ்செயும்
பயனுந்துலங்குந்தானே. (௱)

செழுங்கள்ளினிறைசோலைத்தண்டலையார்திருப்பணிக்குடிருடி
க்கொண்டே, எழுங்கள்ளர்நல்லகள்ளர்பொல்லாதகள்ளரவரெவரோ

வென்னில்,தொழுங்கள்ளருடனேகும்பிடுங்கள்ளர்திருநீறுகுழைக்கு
ங்கள்ளர், அழுங்கள்ளர்தொழுங்கள்ளராசாரக்கள்ளரிவராவர்தாமே

தனத்திலேமிகுந்தசெழுந் தண்டலையார்பொன்னிவளந்தழைத்
தநாட்டில், இனத்திலேமிகும்பெரியோரியாவருக்கு மனமொன்றவெ
ல்லாஞ்செய்வார், கினத்திலேமிகுஞ்சிறியோர்காரியமேசொல்வதொ
ன்றுசெய்வதொன்று, மனத்திலேபகையாகிவுதட்டிலேயுறவாகவாழ்
வர்தாமே. (௱௨)

காலனைவெல்தண்டலையார்வளநாட்டிற் களவுசெய்வோர்தம்மை
ச்சேரில், சாலவருங்குருநிந்தையுடன்கேடுபஞ்சபாதகமீதென்று,சீல
முடையோரணுகார் பனையடியிலேயிருந்துதெரியவாவின், பாலினை
யேகுடித்தாலுங்கள்ளென்பரொனுஞ்சொல்லைப்பயந்துதானே. (௱௩)

சலியாமற்றண்டலையிற்றுயகனுரருள்கொண்டுதருமஞ்செய்யப்,
பொலிவாகிக்கொழுமீதிவந்தபொருளீந்தவைதாம்போகமீந்தால்,மலி
வாகிச்செல்வமுண்டாம்வயன்முழுதும்விளைந்திடுநன்மாரியாகும்,
லியாணப்பஞ்சமில்லைகளப்பஞ்சமில்லையொருக்காலுந்தானே. (௱௪

இரக்கத்தாலுலகாளுந்தண்டலையாரேசிவனேயெந்நாளும்,இர
க்கத்தான்புறப்பட்டீரென்றனையுமிரக்கவைத்தீரிதனுலென்ன,இரக்க
த்தானதிபாவமிரப்பதுதீதென்றுலுமின்மையாலே, இரக்கப்போனு
லுமவர்சிறக்கப்போவதுகருமமென்னலாமே. (௱௫)

ஆழியெல்லாம்வயலாகி யவனியெல்லாமன்னமயமானுலென்ன,
சூழவந்தேயிரப்பவர்க்குப்பசிதீரவுண்டிருக்கும்சுகந்தானுண்டோ,ஏ
ழுலகும்பணியவருந் தண்டலையாரேசொன்னேனெந்நாளும், ..ாழி
நெல்லுக்கொருபுடவைவிற்றாலுநிருவாணங்காய்க்குத்தானே. (௱௬)

பழமொழிவிளக்கம்.

முற்றிற்று.